| | |
|---|---|
| PLACE | THIRUKANNAMANGAI |
| PRESENT NAME | THIRUKANNAMANGAI |
| BASE TOWN | THIRUVARUR |
| DISTANCE | 7 KM |
| MOOLAVAR | BAKTHAVATSALAPERUMAL |
| THIRUKKOLAM | NINDRA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | BATHARAVIPERUMAL |
| THAYAR | ABISHEGAVALLI |
| MANGALASASANAM | 14 PAASURAMS |
| PRATYAKSHAM | VARUNAN,ROMASA MUNIVAR |
| THEERTHAM | DARSHANA PUSHKARANI |
| VIMANAM | UTHBALA VIMANAM |
| NAMAVALI | Sri Abishegavalli nayiga sameda Sri Bakthavatchala parabramane namaha |





**STHALA PURANAM:**

பாற்கடலை கடைந்த போது, அதிலிருந்து கற்பக விருட்சம், காமதேனு ஆகியவை தோன்றியது. இறுதியில் மகாலெட்சுமி வெளிப்பட்டாள். முதலில் அவள் பெருமாளின் அழகிய தோற்றத்தைக் கண்டாள். அதை மனதில் நிறுத்தி இத்தலம் வந்து பெருமாளை அடைய தவம் இருந்தாள். திருமகள் தவம் இருக்கும் விஷயமறிந்த பெருமாள் தனது மெய்க்காவலரான விஷ்வக்சேனரிடம் முகூர்த்த நாள் குறித்து தர சொன்னார். பின் லட்சுமிக்கு காட்சி தந்து, முப்பத்து முக்கோடி தேவர்கள் புடை சூழ பெருமாள் இங்கு வந்து லட்சுமியை திருமணம் செய்தார். பெருமாள் தன் பாற்கடலை விட்டு வெளியே வந்து இங்கிருந்த லட்சுமியை திருமணம் செய்ததால் பெருமாளுக்கு "**பெரும்புறக்கடல்**' என்ற திருநாமம் ஏற்பட்டது.லட்சுமி இங்கு தவம் செய்ததால் இத்தலத்திற்கு "**லட்சுமி வனம்**' என்ற பெயரும், இங்கேயே திருமணம் நடந்ததால் "**கிருஷ்ண மங்கள க்ஷேத்திரம்**' என்ற பெயரும் ஏற்பட்டது.



மூலவர் பக்தவத்சல பெருமாள்



தாயார் கண்ணமங்கை நாயகி

பெருமாளின் 108 திருப்பதிகளுள் ஒன்று. ஒரு தலத்திற்கு இருக்க வேண்டிய விமானம், ஆரண்யம், மண்டபம், தீர்த்தம், க்ஷேத்ரம், நதி, நகரம் என்ற ஏழு லட்சணங்களும் அமைய பெற்றதால்,"ஸப்த புண்ய க்ஷேத்ரம்","**ஸப்தாம்ருத க்ஷேத்ரம்**" என்ற பெயர் பெற்றது. இத்தலத்தில் நடந்த திருமால்- திருமகள் திருமணத்தை காண தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்ததோடு, எப்போதும் இந்த திருக்கோலத்தை கண்டு கொண்டே இருக்க வேண்டும் என நினைத்தார்கள். எனவே தேனீக்கள் வடிவெடுத்து கூடுகட்டி அதில் இருந்து கொண்டு தினமும் பெருமாளின் தரிசனம் கண்டு மகிழ்கிறார்கள்.இன்றும் கூட தாயார் சன்னதியின் வடபுறத்தில் ஒரு தேன் கூடு உள்ளது. இந்த தேன் கூடு எவ்வளவு காலமாக உள்ளது என்பது யாருக்கும் தெரியாது. இந்த தேனீக்கள் பக்தர்களை ஒன்றும் செய்வதில்லை. பெருமாளின் 108 திருப்பதிகளில் இது ஓர் அற்புதமாகும். மோட்சம் வேண்டுபவர்கள் ஒரு இரவு மட்டும் இங்கு தங்கினால் போதும் என்பது நம்பிக்கை.பக்தர்களுக்காக ஆவி போல வேகமாக வந்து அருள்பாலிப்பதால், பக்தர் ஆவி என்றாகி, "**பத்தராவி**" என பெயர் பெற்றார் பெருமாள். இத்தல பெருமாள் உத்பல விமானத்தின் கீழ் அருள்பாலிக்கிறார். சிவபெருமான் நான்கு உருவம் எடுத்து இத்தலத்தின் நான்கு திசைகளையும் காத்து வருகிறார். பொதுவாக எல்லா கோயில்களிலும் நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் விஷ்வக்சேனர், பெருமாளின் சார்பாக லட்சுமியை சந்திக்க சென்றதால் இரண்டு திருக்கரங்களுடன் அழகிய வடிவில் அருள்பாலிக்கிறார்.



ராமானுஜர் தனி சன்னதி



தெப்பக்குளம்

**தர்ஷன புஷ்கரிணி:** மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்த போது, வானத்தை அளந்த காலை பிரம்மன் தன் கமண்டல நீரால் அபிஷேகம் செய்தார். அதிலிருந்து தெறித்து விழுந்த ஒரு துளி இவ்விடத்தில் விழுந்தது. அதுவே தர்ஷன புஷ்கரணி ஆனது. சந்திரன் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்க அலைந்த போது இந்த புஷ்கரணியை கண்டான். இதைப் பார்த்த உடனேயே அவனது சாபம் தீர்ந்தது. எனவே தான் இதற்கு தர்ஷன புஷ்கரணி(தரிசித்த மாத்திரத்தில் பயன் தர வல்லது) என்ற பெயர்

ஏற்பட்டது.இங்குள்ள தாயாரை பெருமாள் இந்த தீர்த்தால் அபிஷேகம் செய்து, பட்ட மகிஷியாக்கினார். இதனால் இந்த தாயாருக்கு அபிஷேகவல்லி என்று பெயர்.

**திருக்கண்ண மங்கையாண்டான்:** நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தை தொகுத்த நாதமுனிகளுக்கு திருக்கண்ணமங்கையாண்டான் என்ற சீடர் ஒருவர் இருந்தார். இவ்வூரில் பிறந்த இவர் பெருமாளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கோயிலைச் சுத்தம் செய்து பெருமாளே அடைக்கலம் என்று இருந்தார். ஒருநாள் இவர் வேதபாராயணம் செய்து கொண்டே நாய் வடிவம் கொண்டு மூலஸ்தானத்திற்குள் ஓடி ஜோதியாகி, இறைவனுடன் கலந்தார். இன்றும் ஆனி மாதம் திருவோண நட்சத்திரம் இவரின் மகா நட்சத்திரமாக கொண்டாடப்படுகிறது. இவரது பெயரே இவ்வூருக்கும் நிலைத்துவிட்டது

| திவ்யதேசம் 018<br>திருக்கண்ணமங்கை (திருக்கண்ணமங்கை) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1638-1647,1848,2008,2673(71),2674(116) |
| மொத்த பாசுரங்கள் | 14 |

**திருமங்கையாழ்வார்**
**திருக்கண்ணமங்கை**

1638 சீர் ஆர் நெடு மறுகின் சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஏர் ஆர் முகில் வண்ணன்-தனை இமையோர் பெருமானை
கார் ஆர் வயல் மங்கைக்கு இறை கலியன் ஒலி மாலை
பாரார் இவை பரவித் தொழப் பாவம் பயிலாவே (10)

1639 பெரும் புறக் கடலை அடல் ஏற்றினை பெண்ணை ஆணை எண் இல் முனிவர்க்கு அருள்
தரும் தவத்தை முத்தின் திரள் கோவையை பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை
அரும்பினை அலரை அடியேன் மனத்து ஆசையை அமுதம் பொதி இன் சுவைக்
கரும்பினை கனியை-சென்று நாடி -கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (1)

1640 மெய்ந் நலத் தவத்தை திவத்தைத் தரும் மெய்யை பொய்யினை கையில் ஓர் சங்கு உடை
மைந் நிறக் கடலை கடல் வண்ணனை மாலை ஆல் இலைப் பள்ளி கொள் மாயனை
நென்னலை பகலை இற்றை நாளினை நாளை ஆய் வரும் திங்களை ஆண்டினை
கன்னலை கரும்பினிடைத் தேறலை-கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (2)

1641 எங்களுக்கு அருள்செய்கின்ற ஈசனை வாச வார் குழலாள் மலை-மங்கை-தன்
பங்கனைப் பங்கில் வைத்து உகந்தான்-தன்னை பான்மையை பனி மா மதியம் தவழ்
மங்குலை சுடரை வட மா மலை உச்சியை நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை பகலை-சென்று நாடி -கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (3)

1642 பேய் முலைத் தலை நஞ்சு உண்ட பிள்ளையை தெள்ளியார் வணங்கப்படும் தேவனை
மாயனை மதிள் கோவல் இடைகழி மைந்தனை அன்றி அந்தணர் சிந்தையுள்
ஈசனை இலங்கும் சுடர்ச் சோதியை எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பினை
காசினை மணியை-சென்று நாடி-கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (4)

1643 ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை இம்மையை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத்து அப்புறத்து உய்த்திடும் ஐயனை கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை குரு மா மணிக் குன்றினை நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை
காற்றினை புனலை_சென்று நாடி_கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (5)

1644 துப்பனை துரங்கம் படச் சீறிய தோன்றலை சுடர் வான் கலன் பெய்தது ஓர்
செப்பினை திருமங்கை மணாளனை தேவனை திகழும் பவளத்து ஒளி
ஒப்பனை உலகு ஏழினை ஊழியை ஆழி ஏந்திய கையனை அந்தணர்
கற்பினை_கழுநீர் மலரும் வயல் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (6)

1645 திருத்தனை திசை நான்முகன் தந்தையை தேவ_தேவனை மூவரில் முன்னிய
விருத்தனை விளங்கும் சுடர்ச் சோதியை விண்ணை மண்ணினை கண்ணுதல் கூடிய
அருத்தனை அரியை பரி கீறிய அப்பனை அப்பில் ஆர் அழல் ஆய் நின்ற
கருத்தனை_களி வண்டு அறையும் பொழில்_கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (7)

1646 வெம் சினக் களிற்றை விளங்காய் விழக் கன்று வீசிய ஈசனை பேய் மகள்
துஞ்ச நஞ்சு சுவைத்து உண்ட தோன்றலை தோன்றல் வாள் அரக்கன் கெடத் தோன்றிய
நஞ்சினை அமுதத்தினை நாதனை நச்சுவார் உச்சிமேல் நிற்கும் நம்பியை
கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனை_கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (8)

1647 பண்ணினை பண்ணில் நின்றது ஓர் பான்மையை
பாலுள் நெய்யினை மால் உரு ஆய் நின்ற
விண்ணினை விளங்கும் சுடர்ச் சோதியை
வேள்வியை விளக்கின் ஒளி_தன்னை
மண்ணினை மலையை அலை நீரினை
மாலை மா மதியை மறையோர்_தங்கள்
கண்ணினை_கண்கள் ஆரளவும் நின்று_
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (9)

1848 ஒரு நல் சுற்றம் எனக்கு உயிர் ஒண் பொருள்
வரும் நல் தொல் கதி ஆகிய மைந்தனை
நெருநல் கண்டது நீர்மலை இன்று போய்
கரு நெல் சூழ் கண்ணமங்கையுள் காண்டுமே (1)

2008 மண் நாடும் விண் நாடும் வானவரும் தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெரு வெள்ளம் உண்ணாமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல் சூடி அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தை எண்ணாத போது எல்லாம் இனிய ஆறே 7

## சிறிய திருமடல்

2673 பேர் ஆலி தண்கால் நறையூர் திருப்புலியூர்
ஆராமம் சூழ்ந்த அரங்கம்(71)

## பெரிய மடல்

2674 என்னுடைய இன் அமுதை எவ்வுள் பெரு மலையை

கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை (116)

**Festivals :** Chitra Pournami – 10 Days Brahmothsavam

**Temple Timings:** 8.00 am to 12.00 pm
5.00 pm to 08.30 pm

**Address :** Arulmigu Bakthavatchala Perumal Thirukkoil,
Thirukkannamangai – 610104.
Tiruvarur District, Tamil Nadu.

**Mobile :** 92454 89881

**Location :** Tiruvarur to Kumbakonam Bus Route. 5 kms from Tiruvarur.

**Nearest Railway Station:** Tiruvarur

**Nearest Airport:** Trichy

**Hotels at Tiruvarur :**

Hotel Selvi's **–** 04366 - 222080

Hotel Royal Park – 04366 – 251020 / 21 / 22 / 23

Courtesy: Dinamalar &
Sri Seshadri Swamy
Dr.V Sadagopan Swamy